**செய்தி வெளியீடு** **நாள் : *03.10.2025***

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், இந்த மாதம் 20ஆம் தேதிக்குள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

***********

***மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்*** *நல்வழிகாட்டுதலின்படி இன்று (3.10.2025) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் "கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின்" இறுதிக்கட்டப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான* ***திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்*** *நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.*

***மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :***

*வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை அமைக்க வேண்டும் என்ற வண்ண மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் அது சார்ந்த தொழில் முனைவோர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று,* ***மாண்புமிகு தமிழக முதல்வர்*** *அவர்களுடைய நல் வழிகாட்டுதலின்படி, ரூபாய் 53 கோடி செலவில் சுமார் 1888 கடைகளும், அந்த கடைகளுடன் கூடிய உணவகங்களும், இந்த வண்ண மீன் வர்த்தக மையத்திற்கு வருகை தரும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நான்கு சக்கர வாகனங்களுக்கு 200, இருசக்கர வாகனங்களுக்கு 200 நிறுத்தும் வசதிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடங்கள், அதோடு மட்டுமல்லாமல், பொதுவான கழிப்பறைகள் — 18 கழிப்பிடங்கள், அதில் 9 பெண்களுக்காகவும், மாற்று திறனாளிகளுக்காக 2 பிரத்தியேக கழிப்பிடங்களும், கீழ்நிலை நீர் தேக்க தொட்டி (5 லட்சம் லிட்டர் கொள்ளளவு), மேல்நிலை நீர் தேக்க தொட்டி (1.35 லட்சம் லிட்டர்), மொத்தம் மூன்று நீர் தேக்க தொட்டிகள் — ஒவ்வொன்றும் 45,000 லிட்டர் கொள்ளளவு கொண்டது.*

*இந்த வண்ண மீன்கள் உற்பத்தி/வர்த்தக மையம் பயன்பாட்டிற்கு வரும் போது, தொழில் சார்ந்தும், வண்ண மீன் உற்பத்தியாளர்களும் சேர்ந்து, கிட்டத்தட்ட 1000 பேர் பயனடைவார்கள் என்று நம்புகிறோம்.*

*இந்த வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை, இந்த மாதம் 20ஆம் தேதிக்குள்,* ***மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்****, உற்பத்தியாளர்களிடம் கடைகளை விருப்பம் தெரிவித்தவர்களுக்கு ஒப்படைத்து, மாத இறுதிக்குள் முழுமையாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரவேற்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*அதேபோல், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், மொத்தம் 260க்கும் மேற்பட்ட பணிகளை,* ***மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்*** *தொடர்ந்து, அந்த பணிகளின் நிலையை அறிந்து, விரைவுபடுத்தி மக்களுடைய பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் நோக்கில் பணியாற்றி வருகின்றார்.*

*அதன் ஒரு பகுதியாக, கடந்த 26 ஆம் தேதி, ஒரே நேரத்தில் ஏழு திட்டங்களை,* ***மாண்புமிகு முதல்வர் அவர்கள்*** *செனாய் நகர் விளையாட்டு மைதானத்தில் தொடங்கி வைத்தார். கோயம்பேடு சந்திப்பில் பசுமை பூங்கா, ராமாபுரத்தில் திறந்தவெளி பூங்கா, செங்கல்பட்டு மாவட்டம் பம்மல், ஈஸ்வரி நகரில் விளையாட்டு திடல், சென்னை வேளச்சேரியில் மேம்பாலத்தின்கீழ் அழகுபடுத்துதல் பணி, விஜயநகர் பேருந்து நிறுத்தம், செங்கல்பட்டு மாவட்டம் முடிச்சூர் இரங்கா நகர் குளத்தை மேம்படுத்துதல் பணி மற்றும் சென்னை தங்கசாலையில் முதல்வர் படைப்பகம் என ஏழு திட்டங்களை ஒரே நேரத்தில் துவக்கி வைத்தார்.*

*அதேபோல்,* ***மாண்புமிகு முதல்வர் அவர்கள்****, இந்த மாத இறுதிக்குள், ஆர்.கே.நகர், அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய இடங்களில் தற்போது கட்டுமான நிலையில் உள்ள பேருந்து நிலையங்களை துவக்கி வைக்க இருக்கின்றார் என்பது மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தி.*

*வாட்டர் பேஷன் ரோடு என அழைக்கப்படும் தண்ணீர் தொட்டி தெருவிலும், ஸ்டான்லி மருத்துவமனை அருகிலுள்ள ஏழ்கிணறு பகுதியில் சுமார் 1590 குடியிருப்புகள் 2025 டிசம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிட்டு,* ***மாண்புமிகு முதல்வர் அவர்கள்****, அந்த பணிகளுக்கு தேவையான அழுத்தத்துடன் ஈடுபட்டுள்ளார்.*

*வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும், பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கு, திருமணங்கள் போன்ற நிகழ்வுகளுக்காக மண்டபங்களை பயன்படுத்த முடியும்படி, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், ஆலந்தூர் உட்பட 12க்கும் மேற்பட்ட இடங்களில் சமுதாய கூடங்கள் கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ளது. அதில், அடுத்த மாதம் நவம்பர் இறுதிக்குள் 4 சமுதாய கூடங்கள்,* ***மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்*** *வழிகாட்டுதலின்படி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட உள்ளன.*

அந்த வகையில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள், ஜனவரி மாதத்திற்குள் துவக்கப்பட்ட மற்றும் துவங்க உள்ள பணிகளைச் சேர்த்து 75% மேலாக ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதற்காக, எப்போது நேரம் கிடைக்கிறதோ, அந்த நேரங்களில் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ்,இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., பெருநகர ஆணையாளர் திரு.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை மேயர் அன்பிற்கினிய திருமதி.பிரியா ராஜன், சுகாதாரத் துறை இணை ஆணையாளர் அன்பிற்கினிய திரு.ஜெயசீலன்,இ.ஆ.ப., சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய திரு.வெற்றி அழகன் மற்றும் மண்டலக் குழுத்தலைவர் திரு.ஜெயின் போன்றோர் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

**இந்த வண்ண மீன்கள் விற்பனை மையம், இந்த மாதம் 20ஆம் தேதிக்குள், மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

இந்த ஆய்வின்போது வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றி அழகன், சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., மாநகராட்சி இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.கூ.பீ.ஜெயின், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™